DINAKARAN 13 FEB 2010





கோவை பூண்டியில் உள்ள ஈஷா யோக மையத்தில் சிவராத்திரி விழா நேற்று நடந்தது. இதில், ஏராளமானோர் கலந்துகொண்டனர். அடுத்தபடம்: ஜகி வாசுதேவ் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

# வாழ்க்கையின் உண்மையான நிகழ்வை உணர்த்துவதே யோகம்

## ஜகிவாசுதேவ் பேச்சு

கோவை, பிப்.13 : கோவை ஈஷா யோகா மையத்தில் 16வது மஹாசிவராத்ரி விழா நேற்று நடந்தது. மாலை 6 மணிக்கு ஈஷா தியானலிங்க வளாகத்தில் நாத ஆராதனை, நடன ஆராதனையுடன் விழா துவங்கியது, பண்டிட் சவுராசியா, ஆனந்தன் சிவமணி, மிடிவல் பண்டிட் ஆகியோரின் இசை நிகழ்ச்சி, கிராமப்புற கலைநிகழ்ச்சி மற்றும் சவுண்ட்ஸ் ஆப் ஈஷா இசை முழக்கம் ஆகியவை நடந்தது. நள்ளிரவில் சந்தியா காலவேளையில் ஈஷா யோகா மைய நிறுவனர் சத்குரு ஜகிவாசுதேவ் தலைமையில் மகா மந்திர உச்சாடனை நடந்தது. விழாவில், பங்கேற்ற பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதையொட்டி, கோவை காந்திபுரத்தில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன.

இதில், சத்குரு ஜகிவாசுதேவ் பேசியதாவது:

சிவன் என்கிற அம்சம் ஒன்றுமில்லாத வெற்றிடத்தை குறிக்கிறது. சிவன் உருவத்தை யோகியாக, அகோரியாக, அழகியசுந்தரராக எவ்வகையிலும், கற்பனை செய்யலாம். எந்த கற்பனைக்கும் அப்பாற்பட்ட சக்தியாக இருப்பவர் சிவன். அவரே முதல் குருவாக, ஆதியோகியாக உள்ளார். சிவராத்திரி என்பது யோககலையை உலகுக்கு அளித்த சிவனை போற்றி நன்றி பாராட்டும் நாளாகும். சிவராத்திரி அன்று முழுவதும் கண் விழித்து, மனதை விழிப்பு நிலையில் வைத்திருக்கும் போது, தியானத்தை இதற்கு முன்பு அறியாதவர் கூட அந்த அனுபவத்தை உணர முடியும். கோள்களின் அமைப்பு விஞ்ஞான ரீதியாக இன்றைய தினத்தில், தியான நிலையை வெளிப்படுத்த ஏதுவாக உள்ளது. முதுகுதண்டை நேராக வைத்து, இரவு முழுவதும் விழிப்புடன் இருந்தால், ஒரு கணமாவது யோகநிலையை உணர முடியும்.

சிவன் அழிக்கும் கடவுள் எனப்படுகிறார். அந்த அழிப்பு என்பது உங்களுக்குள் இருக்கும் பதிவுகளை அழிப்பது தான். கடந்த கால எண்ணங்கள் மனிதனை துன்பத்தில் ஆழ்த்துகின்றன. நிகழ்காலத்தில் இடையூறு செய்து, எதிர்காலம் என்ற இரட்டிப்பு மாயையை உருவாக்குகிறது. முழு விழிப்புணர்வுடன் இருந்தால், இந்த கணத்தில் முழுமையாக வாழ முடியும். இதற்கு உதவி செய்வதே யோக நிலை.

யோகம் என்றால், மூச்சை இழுத்துப்பிடிப்பதோ, தலைகீழாக நிற்பதோ இல்லை. அது வாழ்க்கையின் உண்மையான நிகழ்வை அதன் போக்கிலேயே உணர்வது தான்.

ஒவ்வொரு ஆணின் உடலுக்குள்ளும் பெண் தன்மை உள்ளது. இதை உணர்த்தவே சிவபெருமான் தன்னில் பாதியை பார்வதிக்கு அளித்தார். வேறு எந்த கடவுளும் இது போன்ற நிலைபாடு கொண்டதில்லை. சிவன், பார்வதி ஆனந்த தாண்டவம் ஆடும்போது, பார்வதிதேவி பேரானந்தத்தை உணர்ந்தார். கண் விழித்து பார்த்த போது, உயிர்கள் எல்லாம் அதற்கு மாறாக துன்பத்தில் உழன்று கொண்டிருந்தன. ஆனந்த நிலையை தரும் ஆற்றல் மிக்க சிவனால், அதற்கான வழிமுறையை மனிதர்களுக்கு அளிக்கமுடியும் என்று பார்வதிதேவி தெரிந்து கொண்டார். பார்வதி தேவியின் முயற்சியால், நமக்கு கிடைத்த அற்புத கலையே யோக கலை. அகத்தியர் உள்ளிட்ட முனிவர்கள் யோக கலை பரவ பெரிதும் உதவியுள்ளனர். நமது வாழ்க்கை அமைதியாகவும், இன்பமாகவும் திகழ, தியானமும், யோகமும் பெரிதும் உதவுகின்றன. இந்த வாய்ப்பை அனைவரும் பயன்படுத்தி, ஒருமுறையாவது தியான அனுபவத்தை பெற்றால், வாழ்வின் அர்த்தம் புரியும். இன்பமும், துன்பமும் சமம் என்ற மனநிலை உருவாகும்.

இவ்வாறு சத்குரு ஜகிவாசுதேவ் பேசினார்.